# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(Accredited with 'A+" Grade by NAAC in the Third Cycle)

**பல்கலைப்பேரூர்,திருச்சிராப்பள்ளி - 620 024**

**முனைவர் சு. சீனிவாசராகவன், M.A.,M.L.I.Sc.,Ph.D.,**
தேர்வு நெறியாளர்(பொ)

அலுவலகம் : 0431-2407016
தொலைப்படி : 0431-2407044
மின்னஞ்சல் : coe@bdu.ac.in
வலைத்தளம் : www.bdu.ac.in


---

ந.க. எண்.001/தே.நெ/ப.பி/2022/நாள்:18.04.2022

பெறுநர்

முதல்வர் அவர்கள்
பாரதிதாசன் பல்கலைக்கழக ஆளுகைக்குட்பட்ட கல்லூரிகள்

பொருள்: பாரதிதாசன் பல்கலைக்கழகம் - தேர்வுப் பிரிவு - பட்டச்சான்றிதழ் வழங்குதல் - தொடர்பாக.

\- - -

பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றுள்ள கல்லூரிகளில் நடைபெறும் பட்டமளிப்பு விழாக்குரிய பட்டச்சான்றிதழ்களை பல்கலைக்கழகத்திலிருந்து கல்லூரிகளுக்கு அவ்வப்பொழுது காலதாமதமின்றி விரைந்து அனுப்பப்படும் பொருட்டு கீழ்க்கண்ட வழிகாட்டு நெறிமுறைகள் அனுப்பப்படுகிறது.

1. தங்களது கல்லூரியில் பட்டம் / பட்டயம் / சான்றிதழ் படிப்பு பயின்று தேர்ச்சிப் பெற்று, பட்டம் பெறத் தகுதிப் பெற்று, தற்பொழுது விண்ணப்பித்துள்ள மாணவ / மாணவிகளின் புகைப்படம் மற்றும் விவரங்கள் அடங்கிய பட்டியல் அனைத்தையும் convocation@bdu.ac.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு **compress** செய்து **ZIP/RAR** வடிவில் அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2. மேற்குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரியில் மாணவ / மாணவிகளின் நலன் கருதி அவர்களின் பெயர்களை (தமிழ் / ஆங்கிலம்) பல்கலைக்கழகப் பதிவேடுகளில் உள்ளது போலும் மற்றும் பதிவெண்களில் இடைவெளி இருப்பின் சரியான முறையில் இடைவெளி விட்டும் இணைப்பில் காணும் வழிமுறைகளின்படி தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

3. பல்கலைக்கழகத்தில் பட்டச் சான்றிதழ்களுக்கு செலுத்திய கட்டணத் தொகையின் இரசீது நகல் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

4. மாணவ / மாணவியர்களின் பட்டியலின் இறுதிப்பக்கத்தில் பட்டியல் தயாரித்த சரிபார்த்த கல்லூரிப் பணியாளர்களின் பெயர்கள் மற்றும் கையொப்பங்களுடன் கல்லூரி முதல்வர் அவர்களின் முத்திரையுடன் கூடிய கையொப்பமும் இடம் பெற வேண்டும்.

.......2

5. பல கல்லூரிகள் ஒரே நேரத்தில் பட்டமளிப்பு விழா நடத்துவதால் பட்டச் சான்றிதழ்கள் வழங்குவதில் ஏற்படும் நடைமுறை சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு தங்களது கல்லூரிப் பட்டச்சான்றிதழ்கள் வழங்குவதற்கு தயார் நிலையில் உள்ளதா? என்பதை பல்கலைக்கழக பட்டமளிப்புப் பிரிவில் உறுதி செய்து கொண்ட பின்னர், கல்லூரி பட்டமளிப்பு விழா நாளை உறுதி செய்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. கல்லூரியின் பட்டமளிப்பு விழாவிற்கான அசல் அழைப்பிதழ் ஒரு வாரத்திற்கு முன்னதாக நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

7. கல்லூரியிலிருந்து பட்டச்சான்றிதழ் பெறுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு வருகை தரும் பணியாளர்கள் கல்லூரி முதல்வரிடமிருந்து பெறப்பட்ட அங்கீகாரக் கடிதம் மற்றும் கல்லூரிப் பணியாளர் என்பதற்கான அடையாள அட்டை ஆகியவற்றை அவசியம் கொண்டு வர வேண்டும்.

அனைத்து கல்லூரி முதல்வர்களும் மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும் எனவும், இனி வரும் காலங்களில் இது தொடர்பான முழு ஒத்துழைப்பினை நல்குமாறும் கனிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தேர்வு நெறியாளர் (பொ)**